பக்கங்கள் 6 விலை சதம் 40

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1978 -6- 22
PERIODICALS DIVISION
LIBRARY

வருக... வருக...
உலகப் புகழ்பெற்ற
கைக்கடிகாரங்கள்
தாராளமாகக் கிடைக்கும்
ஒமெக்ஸ் (OMAX)
கெமி (CAMY)
சீக்கோ (SEIKO)
சிற்றிசன் (CITIZEN)
சுவர் மணிக்கூடுகள்
சி. சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் — போன்: 284

ஈழநாடு
THE EELANAADU

மலர் 26 ஆனி 8 மஜுலி 15 இதழ் 188
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 22-6-78

நடையிலும் நங்கைவர்!...
கம்பீ முறும் ஆடவர்!!...
துள்ளித்திரியும் குழந்தைகள்!
அனைவரது தேர்வும்....
பாட்டா பாதணிகள்!...
பாட்டா BATA
சில்லறை மொத்த வியாபாரிகள்:
சி. சின்னத்துரை
அன் பிறதர்
யாழ்ப்பாணம் — போன் 284

# அரசியல் சட்ட திருத்தம் தொடர்பான

# தெரிவுக்குழுவின் அறிக்கை

# சபையில் இன்று தாக்கல்?

## ஜூலை முற்பகுதியில் விவாதம் ஆரம்பமாகும்

(கொழும்பு)

அரசியல் அமைப்புச் சட்ட திருத்தத் தெரிவுக் குழுவின் சிபார்சுகள் அடங்கிய அறிக்கையை இன்று பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய அரசுப்பேரவை இன்று பிற்பகல் 2 மணிக்கு கூடவிருக்கின்றது. சபை நிகழ்ச்சிநிரலில் கண்டுள்ள விஷயங்கள் சபையின் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள விருக்கும் அதேசமயம் அரசமைப்புத் திருத்தத் தெரிவுக் குழுவின் அறிக்கையும் சபையில் பிரதமர் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசியல் சட்டத்தில் செய்யப்படவிருக்கும் மாற்றங்கள் தொடர்பான பல சிபார்சுகள் இந்த அறிக்கையில் அடங்கியுள்ளன.

இச்சிபார்சுகள் தொடர்பாக தெரிவுக்குழு பல தடவைகள் கூடி ஆலோசனை நடத்தியது அதன்பேரிலேயே இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

சிங்களத்தையும் தமிழையும் தேசியமொழிகளாக பிரகடனப்படுத்துவது, வடக்கு கிழக்கு மாகாண நீதிமன்றங்களின் நிர்வாகத்தை தமிழில் நடத்த வழிவகுப்பது. பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துவதுபோன்ற சிபார்சுகள் இந்த அறிக்கையில் காணப்படுவதாகத் தெரிகின்றது.

தெரிவுக்குழுவில் தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்கள் அங்கம் வகிக்கவில்லையென்றாலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் அங்கம் வகித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் கலந்துகொண்டது.

மாற்றங்களுடன் கூடிய அரசியல்திட்டமொன்று புதிதாக உருவாக்கப்படுவதை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எதிர்த்ததாகத் தெரிகிறது. ஏற்கனவே உள்ள அரசியல் சட்டத்தில்தான் மாற்றம் செய்யப்படவேண்டும் என அவர்கள் வற்புறுத்தினராம்.

பொதுத்தேர்தல்களில் விகிதாசார அடிப்படையில் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவதாயும் முக்கிய பிரச்னைகளில் சர்வஜனவாக்கெடுப்பை மாத்திரம் நடத்துவதாயும்

(6-ம் பக்கம் பார்க்க)

## பொருளாதார அபிவிருத்தியில்

## சீனவை நாம் ஆதர்சமாக கொள்ளலாம்

### பிரதமர் பிரேமதாச கருத்து

(கொழும்பு)

பொருளாதார பலமுடைய சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு சீனவை ஆதர்சமாகக்கொள்ளலாம் என்று பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாஸ கூறினார்.

இலங்கை வந்துள்ள சீன உதவிப் பிரதம மந்திரி திரு. கெங்பியாவோ தலைமையிலான குழுவுக்கும் இலங்கைப் பிரதம மந்திரி திரு ஆர். பிரேமதாஸ தலைமையிலான குழுவுக்குமிடையில் நேற்று உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமான பேச்சுக்களின்போது பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையைப் பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடையச்செய்து வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிப்பது இப்போதைய அரசின் கொள்கை என்று திரு பிரேமதாஸ விளக்கினார்.

இலங்கைக்கும் சீனவுக்குமிடையில் புராதனகாலம் தொட்டு இருந்துவரும் உறவு பற்றி அவர் விளக்கினார்.

அணி சேராக்கொள்கையை இலங்கை கடைபிடிக்கும் என்றும் வேறு எந்த நாட்டின் உள்நாட்டு விவகாரத்திலும் இலங்கை தலையிடாதென்றும் பிரதம மந்திரி கூறினார்.

சீன உதவி பிரதமர் திரு. கெங்பியாவோ தமக்கு அளிக்கப்பட்ட உற்சாகமான வரவேற்பிக்கு நன்றி தெரிவித்தார்.

## சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு:

## பொது மக்கள் ஆலோசனைகளை

## இளைஞர்பேரவைகோருகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழ் இளைஞர்பேரவை சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு ஆலோசனைக்குழு தமிழினத்திடையே புரையோடிருக்கும் சாதிமுறையை முற்றாக இல்லாமல் செய்வதற்கு தமிழ்மக்களிடமும் பொதுஸ்தாபனங்களிடமுமிருந்தும் ஆலோசனை கோரியுள்ளது.

இக்குழு யாழ்குடாநாட்டில் ஆங்காங்கேயுள்ள சமூக, சமய பொருளாதார அரசியல் துறைகளில் உள்ள சாதி, சமூக அடிப்படையான நடைமுறைப் பிரச்னைகளை நீக்குவதற்கான ஆலோசனைகளை சமர்ப்பிக்குமாறு கோரியிருப்பதுடன் அதை நீக்குவதற்கான வழிவகைகளையும், எழுத்துமூலம் அடுத்தமாதம் 22ந்திகதிவரை செயலாளர், தமிழ் இளைஞர் பேரவை, 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பலாம் என்று தெரிவித்துள்ளது.

மக்கள் வழங்கும் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த பொதுக்குழு நடவடிக்கை எடுக்குமென அக்குழு தெரிவித்துள்ளது. (லெ)

## பெண்நோயாளி

### தாக்கப்பட்டாராம்

### பெண்சிற்றூழியர்மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் நோயாளர் ஒருவரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்ட புகாரைத் தொடர்ந்து, பெண்சிற்றூழியர் ஒருவர் தற்காலிகமாக வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரி 11-வது இலக்க வாட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு பெண் நோயாளரை அதே வாட்டில் கடமையாற்றும் நிரந்தர பெண் சிற்றூழியர் ஒருவர் நேற்றுத் தாக்கினாராம். இது சம்பந்தமாக நோயாளி தெரிவித்த புகாரைத் தொடர்ந்து அவரைத் தாக்கியதாகக் கூறப்படும் சிற்றூழியர் நேற்றும் பிற்பகல் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## மத்தியகிழக்கிலுள்ள

## இலங்கையர் நிலைபற்றி ஆராய்வர்

(கொழும்பு)

மத்தியகிழக்கில் தொழில் புரியும் இலங்கையர்களின் நிலைமை பற்றி ஆராய்வதற்காக கம்பஹ எம்.பி திரு. [illegible] திஸநாயக்கா இம்மாதம் 27ந்தேதி புறப்பட்டுப் போகவிருக்கிறார்.

மத்தியகிழக்கில் தொழில் புரியும் இலங்கையர்களின் நிலை குறித்தும், மேற்கொண்டும் அந்நாடுகளில் வேலைவாய்ப்புகள் இருக்கின்றனவா என்பது பற்றி திரு. திஸநாயக்கா ஆராய்வார்.

## வழக்கம்பரையில்

## இன்று

## இந்திய நாதஸ்வர வித்துவான் வாசிக்கிறார்

[சுழிபுரம்]

தொல்புரம் வழக்கம்பரை மகாவிஷ்ணு கோவில் பூங்காவன வைபவம் இன்று வியாழக்கிழமை விமரிசையாக நடைபெறும். விசேட நிகழ்ச்சியாக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட நாதஸ்வரமேதை பத்மஸ்ரீ ரி. ஆர். தெட்சணாமூர்த்தி கோஷ்டியினரின் நாதஸ்வரக்கச்சேரி நடைபெறும். அளவையூர் நாதஸ்வர வித்துவான் திரு. என். சிதம்பரநாதன் தவில் வித்துவான் குமாரகுருவும் உடன் வாசிப்பர். கச்சேரி சரியாக இரவு பத்து மணிக்கு ஆரம்பமாகும்.

## தேவை

நல்ல நிலைமையில் உள்ள ஒரு லேடீஸ் பைசிக்கிள் தேவை. பைசிக்கிளுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். 248, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை கோவிலடி, யாழ்ப்பாணம். 9638

## கன்னாகம் பல.நோ.கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது) கன்னாகம்

## வெற்றிட விளம்பரம்

மேற்படி சங்கத்தில் வெற்றிடமாக இருக்கும் இரு முகாமையாளர் தரம்-111 பதவிக்கு பின்வரும் தகைமைகள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வயது:- 23 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. கல்வித்தகைமை:-6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரண) சித்தியும் ஒரு வருடகால அனுபவமும்.

விண்ணப்பப் படிவங்களையும், நிபந்தனைகளையும் ரூபா 1/-செலுத்தி தலைமையலுவலகத்தில் நேரிலோ அல்லது கடிதமூலமோ பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 7-7-78 அன்று பிற்பகல் 5.00 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்
16-6-78 9612


## வரி விளம்பரம்

### தேவை

மதிப்புள்ள லோயர் பெண் ஒருவர் தம்பதிகளைப் பராமரிக்க, சமையல் அனுபவமுள்ள 35 வயதிற்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை. நேரில் நற்சாட்சிப் பத்திரங்களுடன் தொடர்பு கொள்ளவும். க. நாகலிங்கம் அன் சன், 48, 50 பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம். 9637


# 'சாதிப்'பிரச்னை மீண்டும் தலைதூக்க அனுமதிக்கக் கூடாது

—அமிர்

[சாவகச்சேரி]

"விடுதலையைத் தயாராகியுள்ள நாம், எமது இனத்திற்குள் சாதி என்ற வேற்றுமையை வளர்த்து, தமிழ் பாக்கிவேட்டுக்காரத் தீர்க்குரிசிக்கு ஆதாரமான செயல்களில் ஈடுபடுவது வெட்கக் கேடானது. கிராமமட்டத்திலிருந்து சாதிவேற்றுமைகளை ஒழித்துக்கட்டி ஒற்றுமையை நிலைநாட்ட கிராமங்களில் இயங்கும் பொது நல ஸ்தாபனங்கள் முன்வரவேண்டும்."

இவ்வாறு கிழிசெட்டி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க முன்றலில் அப்பகுதிக்கென கிராம அபிவிருத்திச்சங்க மொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைப்பதற்காக நடந்த கூட்டமொன்றில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறினார்.

திரு. க. இதயபரம்பிள்ளை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில், "சமீபகாலம் பொலிஸ்பகுதியில் அண்மையில் சாதிப்பிரச்னை தொடர்பாக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு, அநியாயமாக கொலைகள் கூட இடம்பெற்றன. இதுகுறித்து நாம் வெட்கப்பட வேண்டும். ஒன்றுபட்டு ஒரே இலட்சியத்தை முன்வைத்துள்ள இவ்வேளையில் மீண்டும் சாதிப் பிரச்னைகள் உருவெடுத்து நமமிடையே பிளவுகளை உண்டு பண்ண அனுமதிக்கக் கூடாது. மேற்படி சம்பவம் தொடர்பாக அவர்களை அழைத்து நான் சமாதானப்படுத்த முயற்சி எடுத்துள்ளேன்.

"சாதிவேற்றுமை போன்ற கொடிய பழக்கவழக்கங்களை ஒழித்துக்கட்ட கிராமங்கள் தோறும் உள்ள பொது நல ஸ்தாபனங்கள் முன்வரவேண்டும். கிராம அபிவிருத்திச் சங்கங்களை இதில் அதிக பங்கு வேண்டும். அரசின் புதிய திட்டப்படி கிராமத்திற்கொரு கிராம அபிவிருத்திச் சங்கம் அமைவதால் அதன் மூலம் சிறந்த சேவை செய்ய முடியும்" என்றார்.

## இளைஞர் சேவை மன்றம்

# வேலைவாய்ப்பு அபிவிருத்தியில் முக்கிய பங்கு உண்டு

[யாழ்ப்பாணம்]

தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். மாவட்ட அலுவலகம் மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம். பி. ஜெகநாதனால் திறந்துவைக்கப்பட்டது.

வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு எம். இராசரத்தினம் ஸ்தாபன உதவி ஆணையாளர் திரு. அலெக்ஸ் அல்பிரட், மாவட்ட காணி அலுவலர்கள் திருவாளர்கள் ஏ. எம். எம். குருநாதன், எம். எம். மக்பூல் மற்றும் இளைஞர் உத்தியோகத்தர்கள் இத்திறப்பு விழாவில் கலந்துகொண்டனர்.

இவர்களை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு. ஏ. நீலகண்டனும், திட்ட அதிகாரிகள் திரு. எஸ். ஆறுமுகம், திரு. வே. விமலதாசன் ஆகியோர் வரவேற்றனர்.

திரு. எஸ். பி. ஜெகநாதன் பேசும்போது இளைஞர் சேவை மன்றம் அபிவிருத்திக்கும், வேலைவாய்ப்பிற்கும் முக்கியமான ஒன்றெனவும், கடந்த காலத்தில்தான் இதன் நிர்வாக இயக்குனராக கடமை புரிந்ததாகவும் குறிப்பிட்டார். பல ஆண்டுகளுக்கு முன் இவ் இளைஞர் சேவை மன்றம் இயங்கிவந்தாலும் கூட இது தமிழ்ப்பகுதியில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்டதை யிட்டு மகிழ்ச்சியடைவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இக்காரியாலயம் முக்கிய தேசிய இளைஞர் சேவைமன்றத் தலைவர் திரு சரித் ரத்வத்தை மன்ற பணிப்பாளர் திரு. எஸ். கனகசூரியர் ஆகியோரின் அயரா முயற்சியினால் உருவாக்கப்பட்டது.

## நிதி ஒதுக்கீடு

[பண்டத்தரிப்பு]

அளவெட்டி வடக்கு, அளவெட்டி தெற்கு ஆகிய இரு கிராம சேவையாளர்கள் பிரிவுகளுக்கு ஊடாக செல்லும் வழுக்கை ஆற்று ஓரமாக அணை கட்டுவதற்கு காங்கேசன் துறை தொகுதி எம். பி. யும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

அளவெட்டி கட்டுடைவான வீதியை அகலமாக்கி திருத்தம் செய்வதற்கும் 30,000 ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

## கைகலப்பில் நால்வர் காயம்

[பண்டத்தரிப்பு]

இளவாலைப் பகுதியிலுள்ள மக்குவில் என்ற இடத்தில் இருகோஷ்டிகளுக்கிடையே திடீரென ஏற்பட்ட கைகலப்பில் நால்வர் பலத்த காயங்களுக்குள்ளாகி தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக வேர்ணன்டோ அல்போன்ஸ் ஆகியோரை சன்னாகம் பொலிசார் தேடி வருகின்றனர்.


யாழ். ரேட்டறிக் கழகம்
சென். ஜோன்ஸ் கல்லூரியுடன்
இணைந்து நடாத்தும்
பாடசாலைகளுக்கான

## விஞ்ஞான - சித்திர கைப்பணிப் பொருட்காட்சி

இடம் :
சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

காலம் :
வியாழக்கிழமை 22-6-78
10 மணி தொடக்கம் 6 மணிவரை
வெள்ளிக்கிழமை 23-6-78
9 மணி தொடக்கம் 6 மணிவரை
சனிக்கிழமை 24-6-78
9 மணி தொடக்கம் 4 மணிவரை

உயர்திரு. தி. மாணிக்கவாசகர் அவர்கள்
(வடமாநில கல்வி அதிபதி)
வியாழக்கிழமை காலை 10 மணிக்கு
பொருட்காட்சியைத் திறந்து வைப்பார்.

ஃ பாடசாலை மாணவர்களின் சிறந்த விஞ்ஞானப் படைப்புகள்
ஃ கண்கவர் சித்திரங்கள்
ஃ கைப்பணிகள்

மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் யாவரையும் யாழ். ரேட்டறிக்கழகமும், சென். ஜோன்ஸ் கல்லூரியும் அன்புடன் அழைக்கின்றன;

பரிசளிப்பு விழா சனிக்கிழமை மாலை
5 மணிக்கு நடைபெறும்.

கௌரவ விருந்தினர் :
பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள்
(தலைவர், யாழ். வளாகம்)

பரிசில் வழங்குபவர் :
திருமதி வித்தியானந்தன் அவர்கள்

பிரவேசக் கட்டணம் -/50 சதம்

யாழ். ரேட்டறிக் கழகம்
22-6-78 9634


# சீன உதவிப் பிரதமருக்கு மகத்தான வரவேற்பு

[கொழும்பு]

ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று இலங்கை வந்து சேர்ந்த சீன உதவிப் பிரதமர் திரு கெங்பியாஓ நேற்றுக்காலை 11-05 மணிக்கு கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய போது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

திரு கெங் பியாஓவையும் அவரது பாரியாரையும் பிரதம மந்திரி திரு ஆர். பிரேமதாசாவும் அவரது பாரியாரும் வரவேற்றனர்.

விமான நிலையத்தில் இலங்கை இராணுவ விசேஷப் படைப்பிரிவினர் இவர்களுக்கு மரியாதை அணிவகுப்பு ஒன்றை நடத்தினர்.

பின்னர் சீனக்குழுவினர் மோட்டார் கார் பவனியில் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர். (இ)

# பால்யத் திருமணம் தடைச்சட்டம் வருகிறது

புதுடில்லி, ஜூன் 21

இந்தியாவில் பால்ய திருமணத்தடைப் புதிய சட்டம் இவ்வருடம் அக்டோபரில் அமுல் செய்யப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

மத்திய அமைச்சரவை நேற்று இம்முடிவை எடுத்தது.

# யாழ். வளாகத்தில் பண்டிதமணிக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக் கழகத்தினால் 'இலக்கிய கலாநிதி' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இம்மாதம் 25-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். வளாகத்தில் பாராட்டப்படுவார்.

வளாக இராமநாதன் மண்டபத்தில் மாலை 6 மணிக்கு உரும்பராய் முருகானந்தன் குழுவினரின் நாதஸ்வர இசையுடன் ஆரம்பமாகும். விழாவுக்கு வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை வகிப்பார். பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள், கலாநிதி ஆ. சண்முகதாஸ், வைத்தீஸ்வராக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன், யாழ் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு எஸ். சபாரத்தினம், திரு க. சி. குலரத்தினம், மாணவர் தலைவர் வ. ஜ. ச. ஜெயபாலன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவார். (ச-இ)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

சஜ இல. 14786

1, நமசிவாயம் ராஜகோபாலும் பெண்
2. சாந்திமதியும் இருவரும் உரும்பராய் வடக்கு.
உரும்பராய். — வழக்காளி.

எதிராக

சின்னத்தம்பி பொன்னுத்துரை
இல. 22 பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் 14786-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்வரும் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1978ம் வருடம் ஆடி மாதம் 7ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 3560/-ம் 1975-2-12 தொடக்கம் 1977-12-17 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை சட்ட வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 497/75.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிலுள்ள இலகடி நில. ப 1 குளி 12 இதில் பெரியவாய் அரைவாசிக்காக நெடுங்கால ஆட்சிப்படி வடக்குப் பக்கமாக குழி 14ம் வீடும் கிணறும் செய்பயிர் வளர்பயிரும் இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் றோட்டு மேற்கு நாகன் கணபதிக்கும் பெண் செல்லம்மாவுக்கும் உரிய ஆதனம். தெற்கு சின்னத்தம்பி இராசையாவின் இதன் மிகுதி ஆதனம் இடாப்பிலும் பதிவு D 529/171.

மு. நவரத்தினராசா.
யாழ் மாவட்ட நீதிமன்ற விற்பனவு ஆணையாளர் அன் விளம்பதிப்பாளர்.

"கமலபதி",
ஆஸ்பத்திரி வீதி
மண்டைதீவு.
15-5-78. 9636

ஈழநாடு
The Eelanaadu

# "பொருளாதார சுபீட்சம்பெற மக்கள் தொகை கட்டுப்படுத்த வேண்டும்"

## இலங்கை மன்றக் கல்லூரி கருத்தரங்கில் விரிவுரையாளர்

(வெள்ளவத்தை)

ஒரு நாடு தேசிய அபிவிருத்தியும் பொருளாதார சுபீட்சமும் பெற்று நிர முன்னேற்றம் காணவேண்டுமானால், அந்த நாடு முதலில் குடிசனத் தொகையினைக் கட்டுப்படுத்தவேண்டும். இதைத்தான், உலக நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவும் உலக வங்கியும் வலியுறுத்துகின்றது."

இவ்வாறு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் "இலங்கையில் குடிசனத்தொகை பிரச்சினை" பற்றி விரிவுரையாளர் திரு. ஆர். வசந்திரன் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொழிற்சங்க பிரதிநிதிகளுக்காக நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"ஒரு காலத்தில் பத்து பேர் பகிர்ந்து உட்கொண்ட உணவை, இன்று ஐம்பது பேர் பகிர்ந்து உண்ணவேண்டியுள்ளது. ஒரு மணித்தியாலத்திற்கு 44 குழந்தைகள் வீதம் 1000 குழந்தைகள் நாளாந்தம் எமது மக்கள் தொகையில் சேர்க்கப்படுகின்றனர்.

"1975ம் ஆண்டில், ஒரு கோடி நாற்பது லட்சமாக அதிகரித்த எமது ஜனத்தொகை, இவ்வளர்ச்சி வேகத்தில் செல்லுமானால், மேலும் 28 வருடத்தில் இருமடங்காகும் என்பதில் ஐயமில்லை, இந்நூற்றாண்டு முடிவில் மக்கள் தொகை அதிகரிப்பினால் ஏற்படும் பிரச்சினைகட்கு எமது பொருளாதாரம் ஈடு செய்யுமோ என்பது கேள்விக்குறியாக உள்ளது.

"இலங்கையில் மக்கள் தொகை அதிகரிக்கும் வேகத்திற்கேற்ப உணவு உற்பத்தி அதிகரிக்கவில்லை. இது பெரும் பிரச்சினையாக உள்ளது. குடிசனத்தொகை அழுக்கம் ஏற்படுத்தும் தாக்கம், இளம் சந்ததியினரிடையே வேலையில்லாத பிரச்சினையை ஏற்படுத்துகின்றது. இதனுடன் அதிகரித்துவரும் குடிசனத்தொகை காரணமாக முக்கிய நகரங்களில் வீடில்லாப் பிரச்சினை தோன்றுகின்றது. இதனால் சேரிகளிலும் வீதிகளிலும் மக்கள் வாழும் நிலையும், நெருக்கடி நிலையும் தோன்றுகின்றது."

"சுருக்கமாக ஒரு சட்டபூர்வமான நடவடிக்கையாக அரசாங்கம் மாற்றுவதன் மூலம், இந்த பலனைப் பெற முடியும் எனக் கருதப்படுகின்றது. ஆனாலும் இம்முறையினை அமுலாக்க, மக்களின் ஊட்டச்சத்தியுள்ள உணவின்மை, தேகநலமின்மை போன்றவை தடையாக உள்ளன. கடந்த ஆண்டில் இந்தியாவும் 1948ல் ஜப்பானும் கருச்சிதைவினை சட்டபூர்வமாக ஏற்றுக்கொண்டதனால், ஜனத்தொகையில் குறிப்பிடக்கூடிய அளவு வீழ்ச்சி தென்படுவதாக அந்நாடுகளின் புள்ளிவிபர ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த வழியில் இலங்கையின் குடிசனத்தொகைப் பிரச்சினையிலும் சுமை நீங்கினால் நாட்டில் வறுமை ஒழிந்து பொருளாதாரம் உயர வழி பிறக்கும்."

## பஸ், ரயில் கட்டண உயர்வு

அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவிருக்கிறது. அதிகரிக்கப்படவிருக்கும் கட்டணங்களின் விபரமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுதுள்ள கட்டணங்களே அதிகம் என்பது பொதுமக்களின் கருத்து. எண்ணெய், எரிபொருள் விலை அதிகரித்ததைத் தொடர்ந்து நமது நாட்டிலும் பஸ் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. வாடகைக்கார்களின் கட்டணங்களும் அதிகரித்தன.

இப்பொழுது மீண்டும் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படுகின்றன. வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகையான மோட்டார் கார்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. சமீப மாதங்களில் மோட்டார் கார்களின் இறக்குமதி அதிகரித்துள்ளது. ஆடம்பரக்கார்களின் இறக்குமதிக்குத் தடைவிதிக்கவேண்டிய அளவுக்கு கார்களின் இறக்குமதி அதிகரித்தது. அமைச்சர்கள், பேரவை உறுப்பினர்களுக்கு 'ஜீப்' வண்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

வசதியுள்ளவர்கள் சொந்த மோட்டார் கார்களில் பிரயாணம் செய்கிறார்கள்.

வசதி குறைந்தவர்களே பொதுப் போக்குவரத்துச் சேவைகளை நம்பியிருக்கின்றனர். பஸ் வழியினருக்கு "கைக போனஸ்" வழங்கும் திட்டம் அமுலுக்கு வந்தபின்னர் ஒவ்வொரு பஸ் வண்டியிலும் மூச்சுவிடக் கூட முடியாதபடி பிரயாணிகள் ஏற்றப்பட்டாலும், எவ்வளவுதான் சிரமம் அனுபவிக்க நேர்ந்தாலும் பஸ் பிரயாணத்தையே நம்பியிருக்கும் சாதாரண பொதுமக்கள் தினமும் பஸ்களில் பிரயாணம் செய்கின்றனர்.

பஸ் கட்டணங்கள் அடுத்த மாதத்திலிருந்து அதிகரிக்கப்படுவதுடன் ரயில் கட்டணங்களும் விரைவில் அதிகரிக்கப்படவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாவின் விலையும் பாணின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளன. மாவின் விலை உயர்வால் மற்றும் உணவுப்பண்டங்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதனால் வாழ்க்கைச்செலவு மீண்டும் உயரும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

உலகச்சந்தையில் பொருள்களின் விலைகள் உயரும் போது நம் நாட்டிலும் பொருள்களின் விலைகள் அதிகரிப்பது தவிர்க்கமுடியாதது.

வாழ்க்கைச் செலவைக் குறைக்கப் போவதாகச் சொன்ன அரசாங்கம் அதற்குப் பதிலாக வாழ்க்கைச் செலவை அதிகரிக்கிறதே என்று அரசாங்கத்தின் மீது பழி சுமத்துவதால் எதுவித பயனுமில்லை.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு கட்சி வேறுபாடுகளை மறந்து சகலரும் ஒன்று சேர்ந்து திட்டம் வகுத்துச் செயல்படுவது அவசியம்.

வாழ்க்கைச்செலவு அதிகரித்துவரும் இச்சமயத்தில் பஸ், ரயில் கட்டணங்களையும் அதிகரிப்பது சாதாரண பொதுமக்களுக்குப் பெரும் பளுவாகும்.

கட்டண உயர்வுக்கும் மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கும் ஈடாக அரசாங்க ஊழியர்களுக்கும் மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கும் இதுவரை எவ்வித சம்பள உயர்வாக அளிப்பதால் மக்களின் பிரச்சினை தீர்ந்துவிடாது. எனவே பஸ் ரயில் கட்டண உயர்வு பற்றி போக்குவரத்து அமைச்சு மறுபரிசீலனை செய்வது நல்லது.

# "வதந்திகளும், தனிநாடு பிரிவினைக் கோஷமுமே கலவரத்திற்குக் காரணம்"

## சன்சோனிக் கமிஷன் விசாரணையில் மெக்கானிக் சாட்சியம்

(கண்டி)

வதந்திகள் மூலமும், பிரிவினை வேற்றுமை கோஷம் மூலமும், தனிநாட்டுக் கோரிக்கை மூலமும், தமிழர்களிடமிருந்து சிங்களவர்களையும், சிங்களவர்களிடமிருந்து தமிழர்களையும் பிரித்துவைத்ததுமே கலவரத்துக்குக் காரணம்.

கண்டி அம்பொல எஸ்டேட் வீதியைச் சேர்ந்த ஜி. ஜி. ஜெயதிலக சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும், ஜெயதிலகா மேலும் கூறியதாவது:

தனிநாடு கோருவது சிங்கள மக்களது கோபத்தை சம்பாதிக்க ஒரு காரணமாக இருக்கலாம்.

### எதிரிகள்போல் கருதுகின்றனர்

வவுனியாவுக்கு அப்பால் இருக்கும் தமிழர்கள், சிங்கள மக்களை எதிரிகளைப்போலவே கருதுகின்றனர். சகோதரத்துவம், ஐக்கியம் சௌஜன்யம், வவுனியாவிற்கு அப்பாலுள்ள தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இல்லை. தமிழர்கள் சிங்களவர்களைப் பரம எதிரிகள்போல் கருதுகின்றனர்.

அங்குள்ள தமிழ் மக்களிடையே சிங்களவர்களைப் பற்றித் தவறான எண்ணம் பரப்பப்பட்டுள்ளது. வவுனியாவிற்கு அப்பால் உள்ள பிரதேசத்தை அவர்கள் தமக்கு மட்டும் சொந்தமான ஒரு நாட்டைப் போல்நினைக்கிறார்கள்.

### வரவேண்டிய அவசியமில்லை

சிங்களவர் அங்கு வரவேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள். இவ்வாறான தவறான செயல்களில் கௌரவ மாணவர்களும் படிப்பறிவுள்ள தமிழர்களும் ஈடுபடவில்லை. ஒருசில இளைஞர்களே இவ்வாறு செய்கிறார்கள். இதற்கு முழுவதும் அரசியல்வாதிகள் காரணம் என்று கூறமுடியாது. எனினும் அரசியல்காரணமாக அவர்கள் உணர்ச்சிவசப்பட்டிருக்கலாம்.

வடபகுதியில் இருந்துவரும் ரயில்களில் யாழ்ப்பாணம் பிரயாணிகள் மற்றவர்களுக்கு இடம்கொடுக்கமாட்டார்கள். அனுராதபுரம் ரயில்நிலையம் வரும்வரை ஆசனத்தில் படுத்து உறங்குவார்கள். இடந்தாருங்கள் என்று பணிவுடன் கேட்டாலும் தரமாட்டார்கள்.

### சிங்கள எழுத்து தார்ப்பூச்சு

நான் 77 பெப்ரவரி மாதம் முதல் கிளிநொச்சி பகுதியில் அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்குப் பொறுப்பாக இருந்தேன்.

கிளிநொச்சியில் கடமையேற்றபின், அப்பகுதியிலுள்ள பெயர்ப்பலகைகளில் சிங்கள எழுத்துக்களுக்கு தார்பூசி சாணம் அடிக்கும் சம்பவங்களை கண்டிருக்கிறேன்.

கடந்த தேர்தல்காலத்தில் பரந்தன் சந்தியில் நடைபெற்ற அரசியல் கூட்டம் ஒன்றில் இலங்கையின் தேசியப் படம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது. அந்தப் படத்தில் சிங்களப்பகுதி, தமிழ்ப்பகுதி என இருகூறாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு வர்ணத்தில் காட்டப்பட்டிருந்தது. நான் படத்தை 10 நிமிடம் வரை அவதானித்தேன். படத்தின் தமிழ்ப் பகுதியில் வாள் ஒன்று குத்தப்பட்டு அதிலிருந்து இரத்தம் பீறிட்டு வருவதுபோல் சித்தரிக்கப்பட்டிருந்தது.

கார்ப் போட்டிகளுக்குரியப் பட்ட இப்படத்தை நிறுத்தி வைக்கக் கூடியதாக கோல் அடித்து வைத்திருந்தனர். இது கூட்டம் நடைபெறுவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னரே வைக்கப்பட்டிருந்தது. சகலருக்கும் தெரியக் கூடிய விதத்திலே இதனை வைத்திருந்தனர்.

சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் பேதப்படுத்தி வைக்கும் நோக்குடன்தான் இதனைக் காட்சிக்கு வைத்து இருக்கிறார்கள் என நான் நினைத்தேன். நானும் எனது வாகனச் சாரதியும் இதைப் பற்றிப் பேசிக் கொண்டோம்.

### தேர்தல் கூட்டம்

இதன் பிறகு சில தினங்களில் ஒரு தேர்தல் கூட்டம் நடந்தது. நானும் அங்கு சென்றிருந்தேன். அக்கூட்டத்தில் பேசிய பேச்சாளர் சிலர் கூட்டத்தினரை உணர்ச்சி வசப்படுத்தும் பேச்சுக்களை பேசினர்.

தமிழர்களுக்கு நீண்டகாலமாக ஒரு சுதந்திரமான ராஜ்யம் இருந்தது என்று கூறினார்கள்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவோ, திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவோ பதவிக்கு வந்தாலும், இவர்கள் இருவரது ஆட்சியிலும், தமிழ் மக்களுக்கு எவ்விதப் பயனும் ஏற்படாதென்று கூறினார்கள்.

விமோசனமும், விடுதலையும் சுதந்திரமும் தமிழ் மக்களுக்கு தனித் தமிழ்நாடு கிடைத்தபின்பே கிடைக்கும் என்றும் இக்கூட்டத்திற் பேசப்பட்டது.

சிங்களத் தலைவர்களை அப்பேச்சாளர்கள் தாக்கிப் பேசிய போது கூடியிருந்த இளைஞர்கள் கைதட்டி ஆரவாரித்து கோஷமிட்டனர்.

### சிறீமா விஜயம்

முன்பு பிரதமராக இருந்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கிளிநொச்சித் தொகுதிக்கு வருவதற்கு ஏற்பாடாகியிருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக, காரில் ஒலிபெருக்கியைப் பொருத்திக் கொண்டு கடைகளையும், வர்த்தக நிலையங்களையும் மூடி விடுமாறும் சனிக்கிழமை சந்தையை ஞாயிற்றுக்கிழமை வைக்குமாறும் கேட்டுக்கொண்டார்கள். கூட்டத்தில் மக்களைக் கலந்து கொள்ள வேண்டாமென்றும் கூறினார்கள்.

அப்பகுதியில் ஒட்டப்பட்டிருந்த ஸ்ரீமாவின் வருகை பற்றிய துண்டுப் பிரசுரங்கள் யாவும் கிழிக்கப்பட்டன. தமிழ்த் தலைவர்களின் படங்கள் அங்கு காணப்பட்டன. ஒரு சிங்களத் தலைவரது படமாவது இருக்கவில்லை. அப்படி இருந்தாலும் அது கிழிக்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சியில் சிங்களத்தில் எழுதப்பட்ட சாலை சின்னங்களை மாற்றச் சென்றால், இது சிங்களத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இது தமிழ் நாடு, ஆதலால் தமிழில் எழுதுங்கள் என்று கூறுவார்கள். இது தமிழ் பிரதேசமென்றும், யாவும் தமிழில் செய்யப்படவேண்டும் என்றும் கூறுவார்கள்.

### பாடசாலைகள் சேதம்

ஆகஸ்ட் கலவரத்தின் போது கிளிநொச்சி பகுதியில் உள்ள சிங்களப் பாடசாலைகளும், சிங்கள வீடுகளும் உடைத்து நிலைக்களப்பட்டது.

ஊரியாலயம் உடைத்து நாசமாக்கப்பட்டு. வாகனங்களும் சேதப்படுத்தப்பட்டிருந்தது. நான் பொலிஸாருடன் போய் இவற்றைப் பார்த்தேன்.

### கண்டி வீடும் சேதம்

எனது அறையும் உடைக்கப்பட்டிருந்தது. கண்டியில் இருந்த என் வீடும் தாக்கப்பட்டு உடைக்கப்பட்டிருந்தது.

[5-ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

அன்பே தெய்வம். அன்பே அறத்துக்கு வாசல். அன்பே தியானத்துக்கு திறவுகோல். அன்பே ஞானத்தின் சிகரமாகும். —கௌதமபுத்தர்

